வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3555 / ஆ 5/ 2018 நாள் –11–2018

பொருள் வேலூர் மாவட்டம் – பள்ளிக் கல்வித் துறை – தேர்வுகள் –அரசு / நிதயுதவி உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2017–2018ம் கல்வியாண்டில் 10 ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் 100 சதவிகித தேர்ச்சி அளித்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 11–11–2018 காலை 10.30 மணியளவில் நடைபெறுதல் – அனைத்து அரசு / நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கலந்துக்கொள்ள கோருதல் சார்பு.

••••••

2017–2018 ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவிகித தேர்ச்சி வழங்கிய வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வேலூர், வி ஐ டி பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்பட உள்ள பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பு செய்ய இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் இவ்விழாவில் மாண்புமிகு பத்திரபதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பு செய்ய இருக்கிறார்கள். எனவே வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு / நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தவறாமல் கலந்துக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| கூட்டம் நடைபெறும் நாள் | | 11 – 11 – 2018 |
| கூட்டம் நடைபெறும் நேரம் | | காலை 10.30 மணி |
| கூட்டம் நடைபெறும் இடம் | | டாக்டர் எம். சென்னரெட்டி அரங்கம்<br>வி ஐ டி பல்கலைக்கழகம், வேலூர் |

இணைப்பு
கூட்டபொருள்

8.11.18

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

8/11/18

பெறுநர்
அனைத்து அரசு / நிதியுதவி உயர் மற்றும்
மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அரக்கோணம் / இராணிப்பேட்டை / வேலூர்
வாணியம்பாடி / திருப்பத்தூர் உரிய தொடர் நடவடிக்கைக்கு அனுப்பலாகிறது.